விலை நயா 1-25

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 வைகாசி 5 ஞாயிறு 16 இதழ் 98

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18 5 84

UNIVERSITY OF JAFFNA LIBRARY 18-5-1984 SERIAL DIVISION

பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்கள் மூடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திய போக்குவரத்துச் சபையிலிருந்து இயங்கி வந்த பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்கள் மூடப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். ஏ. ஸீ. மொகமட் நேற்று விடுத்த உத்தரவின்படியே இரு டிப்போக்களும் மூடப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இரு டிப்போக்களிலும் இயங்கிவந்த சாலைகளிலும் நேற்றுத் தொடக்கம் போக்குவரவுக் டிப்போவுக்கு மாற்றப்பட்டு செலுத்தப்பட்டுவருகின்றன.

இரு டிப்போக்களும் மூடப்பட்டிருந்தபோதிலும், பஸ் சேவை வழமைபோலவே நடைபெறும் பொதுமக்களின் நன்மை கருதி மூடப்பட்ட டிப்போக்களில் இரவுநேரம் பணிபுரிந்து நின்று அதிகாலை வழமைபோல் டிப்போக்களிலிருந்து சேவையாற்றும் என்றும் வடமாகாணத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். காரைராஜன் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் பலி!

(கரவெட்டி, புலோலி நிருபர்கள்)

"குமரன்தரை" என்றழைக்கப்படும் தம்பிராஜா தெரு

(8ம் பக்கம் பார்க்க)

"எங்களைக் கடத்தியவர்கள் பயங்கரவாதிகள் இல்லை!

அவர்கள் விடுதலைப் போராளிகள்!!

ஒழுக்கமானவர்கள்; படித்தவர்கள் உலக விவகாரம் தெரிந்தவர்கள்"

அமெரிக்க அலன் தம்பதிகள் பேட்டி

(இ. சந்தசாமி).

"யாழ்ப்பாணத்தில் எங்களைக் கடத்தியவர்கள் பயங்கரவாதிகள் இல்லை. அவர்கள் தமது உரிமைக்காகப் போராடும் விடுதலைப் போராளிகள்" என்று அமெரிக்க அலன் தம்பதிகள் நேற்று கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்கள்.

நாம் கடத்தப்பட்டு ஐந்து நாட்கள் தனித்த இடமொன்றில் வைக்கப்பட்டிருந்த அனுபவத்தை ஸ்டீவன் அலனும், திருமதி அலனும் மனம்திறந்து பகிர்ந்து கொண்டார்கள்.

"நாம் பணயமாக வைக்கப் பட்டிருந்த எந்தக் கட்டத்திலும் அவர்கள் எங்களைக் கொலை செய்யப்போவதாகக் கூறவுமில்லை. எங்கள் அவர்களை கேள்விகளுக்கும் பதில்கள் கொடுத்து விடுவார்கள் என்று நாம் அஞ்சியதுமில்லை" என்றும் அலன் தம்பதியர் சொன்னார்கள்.

பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கும் பதில்களை மாறி மாறி இருவரும் கூறினார்கள்.

"எங்களைக் கடத்திய இளைஞர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்கள். நன்றாகப் படித்திருக்கிறார்கள். உலக விவகாரங்களை நன்கு அறிந்து இருக்கிறார்கள். சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுகிறார்கள்" என்று ஒரே குரலில் இருவரும் தெரிவித்தார்கள்.

திருமதி ஒருவரின் கேள்விக்கு அமெரிக்கத் தம்பதியர் பதிலளிக்கையில், நாங்கள் பி. ஐ. ஏ உளவாளிகள் என்றதாகவும், நமது உரிமைப் போராட்டத்துக்கு உலகின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடனுமே எங்களைப் பணயக் கைதிகளாக வைத்திருந்ததாகக் கூறியதாகக் குறிப்பிட்டார்கள்.

"எங்களுடன் மிகவும் பண்புடன் நடந்துகொண்டார்கள். எமது சில தேவைகளையும் உணர்ந்து பூர்த்திசெய்தார்கள்" என்று திருமதி அலன் கூறினார்.

கடத்தல் எப்படி நடந்தது என்பதை அலன் விபரித்தார். வீடியோவில் "ஜேக்கி பொவல்" படம் பார்த்துக் கொண்டிருந்தபோது கடத்தல் நடந்ததாகக் கூறினார்.

"இரவு 8 மணிக்கு சில இளைஞர்கள் எமது குடிநுழை வீடுக்கு வந்து, வங்கிகளுக்குச் சில நூறுகளைத் தந்ததாகவும்படி

(8ம் பக்கம் பார்க்க)

"அலுமாரியிலிருந்து எதையும் எடுக்கவில்லை"

(கொழும்பு)

தமது அலுமாரியிலிருந்து எதையுமே கடத்தல்காரர்கள் எடுத்துச் செல்லவில்லையென்று நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்க அலன் தம்பதியினர் குறிப்பிட்டனர்.

"நாங்கள் கடத்திச் செல்லும்போது எமது பாஸ்போர்ட்டுகளை எடுத்துவரும்படி பணித்தனர். அவற்றை எம்முடன் எடுத்துச்செல்லுமே. இவற்றைவிட எமது பொருட்கள் எதையும் அவர்கள் எடுக்கவில்லை" என்று தம்பதியர் சொன்னார்கள்.

"எங்களைக் கடத்திய இளைஞர்களில் ஒருவர் கொழும்பில் தங்கியிருந்த வீடு எரிக்கப்பட்டதாகவும், தனது புத்தகங்கள் உட்பட சில உடமைகள் எரிந்த நாசமாய்ப்போய் விட்டதாகவும் கூறினார்" என்றும் திருமதி அலன் சொன்னார்.

சர்வகட்சி மாநாடு மீண்டும் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் பொருட்டு சர்வகட்சி மகாநாடு மீண்டும் இன்று மாலை 6 மணிக்குநடைபெறவுள்ளது

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரின் ரெலெக்ஸ் முன்னோடிகளான

யூனிவேர்சல் ரெலெக்ஸ்

உலகத்தின் தலைவாயில்!
யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டே
உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம்
உற்றாருடனும், மற்றோருடனும் நேரடித்
தொடர்பு கொள்வதற்கு
எமது சர்வதேச நேரடித் தொலைபேசி மற்றும்
ரெலெக்ஸ் நவீன சாதனங்களை நாடுங்கள்.

யூனிவேர்சல் ரெலெக்ஸ்,

சர்வதேசநேரடித்தொலைபேசிச்சேவை
இல: 536, (288) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23006 — 23100
ரெலெக்ஸ்: 22136 UNITEL - CE

இரவு பகல் முழுநேர சேவை

"வாக்கிலுக் கடிய வேகத்தில் கண்ணிமைக்குக் நேரத்தில் குறைந்த கட்டணத்தில் உலகத் தொலைத்தொடர்புகளை துரிதமாக வழங்குவதே எமது சேவை"

2426

அமெரிக்கத் தம்பதிகள் கடத்தல் சம்பவம்!

'குமார்' இரகசியப் பொலிசாரால் விசாரணை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வைத்து அமெரிக்கத் தம்பதிகள் கடத்பட்ட சம்பவம் தொடர்பாக ஆகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று அவரது கொழும்பு இல்லத்தில் வைத்து இரகசியப் பொலிசாரால் விசாரணைக்குப் படுத்தப்பட்டதாக தெரியவருகிறது. (இ-வெ)

மட்டக்களப்பில் தொடர்ந்து ஹர்த்தால்

(மகிடக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று, இன்று, நாளையும் மூன்று நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டது கடந்த 14ம், 15ம் திகதிகளில் இன்று மேற்கொள்ளப் பட்ட ஹர்த்தால் சரிவரநடைபெறவில்லை என்று ஒரு பிரிவும் மாவட்டம் முழுவதும் இயக்கம் ஒன்று தண்டுப்பிரகாரம் ஒன்றின் மூலம் மீண்டும் மூன்று நாட்களுக்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகம் இராணுவத்தினரால் சோதனை இடப்பட்டபோது, வைத்து செய்யப்பட்ட இரு பல்கலைக் கழக உத்தியோகத்தர்கள் [illegible] மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 30 வரை யாழ் பல்கலைக் கழகத்தில் சோதனை நடைபெற்றதாகப் பல்கலைக் கழக வட்டாரம் தெரிவித்தது.

யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட [illegible] சேர்ந்த தொழில் நுட்பவியலாளர் பலரிடம் (ஈரவெட்டியில் வசிப்பவர்), யாழ். பல்கலைக் கழக தொலைபேசி இயக்குநர் கே. இரத்தினசபாபதி [illegible]

8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

Toyota Hiace (டீசல்) பிரயாணிகள் வான் பிரத்தியேக வாடகைக்கு அகிலத் தொருக் விற்பனை (Sales) வாகுக கூப கோகிக வாடகைக்கு விடப் படும். தொடர்பு கொள்க. 82 பிரப்பங் குளக் ரோட் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் அல்லது 74 மணிக்கூடு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
2374

பூரண விலத்திறனுடைய பகுபாய் வெண்சாரை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக 257, கரவெட்டி துறை வீதி, யாழ்ப்பாணம் 2406

மல்லாகம் கோக் ரோட் வீதியோரமாகவுள்ள 8 பரப்புக்காணியுடன் அமைந்த புதிய வீடு கடன் விற்பனைக்குண்டு தொடர்பு: ஞா. மகேந்திரன் நரியாகிடான் கோக் ரோட் மல்லாகம்.
2400

ப த்திரத்துறை கல்லூரி வீதியில் சகல வசதிகளுடன் நாலு பரப்பு காணியில் இருக்கும் வீடு விற்பனைக்கு உண்டு. கப்பிரமணியம் சட்டத்தரணி தம்பனை பருத்தித்துறை.
2395

11 Sri கடேசன் வகை ஒஸ்டின் மினி (Austin) உடன் விற்பனைக்கு. 154 கல்லு திட்டி ரோட் யாழ்ப்பாணம்.
2394

தேவை

எங்கள் கம்பனிக்குத் பொருட்களை விற்பனை செய்வதற்குக் அவற்றை பொலிதீன் உறையினுள் இட்டு அடைப் பதற்கும் ஆட்கள் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் வந்து மாலை 5 மணிக்கு முதல் சந்திக்கவும். கி. பத்மநாதன், Pan-organisation, 124, ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம்.
2380

சொழுந்திக் தங்கை அலுவலகத்தை கொண்டுள்ள விதானையொருவருக்கு யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கு சமீபமாக அலுவலக அறை (Office Room) தேவை. அறையளவு 20'X20' விஸ்தீரணமுள்ளதாக இருத்தல் வேண்டும். கடன் தொடர்பு கொள்ளவும். சிற்றி பெடிக்கல்ஸ், 487 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2416

யாழ். நகருக்குள் அச்சகம் விநியோகிப்பதற்கு சகல வசதிகளுடன் கூடிய இடம் கடன் தேவை. (பிரதான வீதியில் இருப்பின் விரும்பத்தக்கது) தொடர்பு: விளம்பர இல: 2397 C/o சமநாடு யாழ்ப்பாணம். 2397

தெல்லிப்பழைத் திருச்சபை பாலர் பாடசாலைக்கு பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி பெற்ற உதவி ஆசிரியர் ஒருவர் கடன் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நிலைக்கிழமை 21ம் திகதி காலை 9 மணிக்கு தொடர்பு கொள்ளவும். குருகுல தெல்லிப்பழை. 2396

கலா மிலம் இனம்!
விபரங்கள் நேரில்
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்

தேவை

ஐந்து வருடங்களுக் குமேற காத அனுபவமுள்ள ஒப்பத வதுக்கு மேற்பட்ட வயது வடைய குடும்பமுக்க மற்ற கார் சாரதி கடனே தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். அரசாத்தினம் கந்தனருள் 54, கிராமலி வீதி, யாழ்ப்பாணம். 2412

ஊழியர் சேமலாபநிதி B T. T. வேலையில் அதிக அனுபவமுடைய இலங்கப்பா நல்ல நடுத்தரவயதுடைய வகுதி மேற்பாவருக்கு வேலை தேவை முழுநேரம் அல்லது பகுதி நேரம் தொடர்பு: விளம்பர இல: 2384 C/o சமநாடு யாழ்ப்பாணம். 2384

காணவில்லை

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வேலணை வடக்கில் வசித்தவருமான கந்தையா கிள்ளத்துரை என்பவரை 25/3/84ல் பூநகரி நகர் லூரிக் உள்ள மகள் மகன் ஸ்ஸ்வரி தருமராசா என்பரிடம் விட்டுக் இருந்த காணவில்லை இவரைக்கண்டவர்கள் பிள்ளையுடன் முகவரிக்கு தகவல் கொடுத்தால் சன்மானம் வழங்கப்படும். கி. தருமலிங்கம் சோளகத்தை வேலணை-5
2404

யாழ்ப்பாணமாநகராட்சி மன்றம்

கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான அரசு முத்திரையிடப்பட்ட வேலைகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பாகஷயூர் மைப்பேற்று நிலைய வளவுக்குள் கொங்கிறீட் வேலைத்தல ஊழியர்களுக்கான வேலைத்தலம், அலுவலகம், களஞ்சிய அறை, மின்தூக்கி பதனிடும் தொட்டிகள் அமைத்தல்.

02. நவீனசந்தை 1ம் கட்டட கட்டிடத்திற்கு எலக்ட்ரிக் பூசுதல்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 30ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை ஒவ்வொரு வேலைக்கும் வேலைப்படிவம் கட்டணமாக ரூபா 75/= வேலை வலிப்புப்பணமாக ரூபா 250/= செலுத்துவதன்பேரில்பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் வேலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வேலைக் விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி.வி.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
16.05.84.
(2407)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

காணவில்லை

எனது மருமகன் BAG திரு நெல்லேவி — சோனாடரவில் வீதியில் தனி கோட்டர் சமிக்கிலில் இருந்து விழுந்து விட்டது. ஒப்படைப்போர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப் படும். AICS 89, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2393

தேவை

வீடியோ படப்பிடிப்பு, திருமணம் மற்றும் சகல வைபவங்களையும் திறம்பட வீடியோவில் படம் பிடிப்பதற்கு பொழுதுபோக்கு பிரபல்யமான நர்மாஸ் போட்டோ, 50, விதானையார்வீதி சுன்னாகம் யாழ்ப்பாணம். 2392

பதவி வெற்றிடம்

நல்ல நிலையில் இலங்கை அரசாங்கத்து அனுபவமிக்க பின்வரும் வேலையாட்கள் தேவை, தகுதியானவர்கள் பின்வரும் விலாசத்திற்கு 25/05/1984ம் திகதி நேரில் வரவும்.

1. உழவு இயந்திரம் - லொறிகள் திருத்தும் டீசல் மெக்கானிக்.
2. ரிங்கர்(மோன் - எலெக்ரிக் வெல்டிங்)

ஜெயா என்ஜினியரிங் வேக்ஸ்
பிரதான வீதி,
முல்லைத்தீவு.
2313

த.சண்முகராஜா JPUM
சட்டத்தரணியும்
பிரகித்த நொத்தாரிசும்
கோண்டாவில்

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரம், ஆஸாத் ரோட்டு 49ம் இலக்கத்தில் வசித்த மீராண் முத்தில் முத்தராஜா என்பவரின் மரணசாதனம் சம்பந்தம் கட்டளை விடுத்தல்,

மரணமெய்தியவர்

முத்தராஜா நஜீப் 49 ஆஸாத் ரோட்டு முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன)
திருமாதிக்கம் இல: 8797

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எங்கிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு, அதற்கிணங்கிப் பின்னுறுதிக் கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதிவுப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முழுமை தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுவாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1984ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
கு.குலசிங்கம்
பதிவாளர்

தயாரித்தது
த.சண்முகராஜா
(ஒப்பம்)
மனுதாரர் சார்பாக வழக்கறிஞர்
(2408)

அறிவித்தல்

எமது நிறுவனத்தில் மேற்பார்வையாளராக கடமைபுரிந்த டீசன் விழுக்கப்படுக் திரு. காஜா. கோவிந்தன் 18-05-1984 திகதி முதல் எமது சேவையில் இல்லை, என்பதை எமது வாடிக்கையாளருக்கும் ஏனையோருக்குக் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ராம்சன்ஸ் பிரவாணப் பொருட்கள் தொழிலகம்,
இணுவில் ரோடு, (2406) காங்கேசன்துறை.

தேவை

அனுபவமுள்ள

நெசவாளர்கள் (Weavers)
நூற்கோற்போர் (Drawers)

திங்கள், செவ்வாய், புதன் நாட்களில் தொடர்பு கொள்ளவும்

கே. எஸ். ரி. ரெக்ஸ்ரைல்ஸ்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
[விவசாயப்பாடசாலை முன்னால் — Opposite Farm School]
[2411]

சங்கானை மல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை மல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரப்பிரிக்கப்பட்ட 5823 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வவுட்புப்புக் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் மதியுத் தபால் மூலம் இடது பக்க மூலையில் "வெற்றுச்சாக்குக் கேள்வி" என எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், சங்கானை மல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 25-5-84

பொதுமுகாமையாளர்

17-5-84, சங்கானை. (2413)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கேள்வி அறிவித்தல்

நவீனசந்தை 1ம் கட்டட வேலைகள் கடை இல. 14, 15ம். முற்றவெளி ஆக்கிரமிப்பிலுள்ள கடை இல. 5, முற்றவெளி சமிக்கி பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை கட்டளையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 1-6-84ம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கான வேலைகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 31-5-84ம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2 வேலைகள் மாநகராட்சி மன்றத்திலும் 30-5-84ம் திகதி புதன்கிழமை மாலை 2-30 மணிவரை வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேலைப் படிவங்களைப் பெறுவதற்கு அடையாள அட்டை அல்லது கிராம சேவையாளர் வதிவிடச்சான்றிதழைச் சமர்ப்பித்து குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப்பணமும் வேலைப்படிவங்களுடன் ரூ. 50/-ம் செலுத்துதல் வேண்டும் வேலைப் படிவங்களை உள்ளடக்கும் உறை அரசு முத்திரையிடப்பட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு யாழ். மாநகர ஆணையாளருக்கு விலாசமிடப்பட்டு யாழ் மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள வேலைப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால்மூலம் யாழ் மாநகர ஆணையாளருக்கு 31-5-84ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இவ்வேலைகள் சம்பந்தமான இதர விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-5-84.

அட்டவணை

3. குத்தகை விபரம்	குத்தகை காலம்	வேலைப் பிணை	நிர்ணயிக்கப் பட்டதொகை குத்தகை தொகை
அ. நவீனசந்தை 1ம் கட்டட மேல்மாடிக்கடை இல. 14, 15	5 வருடம்	1500/-	81000/-
ஆ. முற்றவெளி இறைச்சிக்கடை இல. 5	12 மாதம்	2500/-	5000/-
இ. முற்றவெளி சமிக்கி பாதுகாப்பு நிலையம்	7 மாதம்	250/-	—

(2398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைகுடாப்பகுதியில்

சவுதி எண்ணெய்க் கப்பல்மீது அடையாளம் தெரியாத விமானம் தாக்குதல்!

எண்ணெய் விலை அதிகரிக்கலாம் என எச்சரிக்கை

ரியாத், மே. 17

வளைகுடா கடற்பகுதியில் சவூதி அரேபியாவின் எண்ணெய்த் தாங்கிக் கிக் கப்பலொன்று அடையாளம் தெரியாத விமானமொன்றினால் தாக்கிச் சேதமாக்கப்பட்டது. இவ்வெண்ணெய்க் கப்பலில் ஆயிரம் தொன்கள் எண்ணெய் இருந்ததென்று தெரிவிக்கப்பட்டது தாக்குதலையடுத்து இக்கப்பல் முழுவதிலும் தீப்பிடித்துக் கொண்டது.

வளைகுடாப் பகுதியில் நடந்த இத்தாக்குதலுக்கு ஈரானே பொறுப்பு என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் ஈரான் தரப்பிலிருந்த எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வளைகுடாப் பகுதியில் ஈரான், ஈராக் போர் தொடர்ந்த நிலைத்துவருவதால் இப்பகுதியில் சென்ற வேறு பல சரக்குக் கப்பல்களும் தாக்குதல்களுக்குள்ளாகின என்று குவைத் தெரிவித்துள்ளது. இத்தாக்குதல்களில் ஈரான், ஈராக் ஆகியன இணைந்தே ஈடுபடுகின்றன என்றும் கூறப்படுகிறது

சவூதி எண்ணெய்க் கப்பல் தாக்கப்பட்டிருப்பதாலும், வளைகுடாக் கப்பல் போக்குவரத்துத் தொடர்ந்து சீர்குலைக்கப்படுவதாலும் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்குமென்று வளைகுடா நாடுகள் பல எச்சரித்துள்ளன.

இச்சவூதி எண்ணெய்க் கப்பல் வளைகுடாப் பகுதியில் கடந்த சில வாரங்களில் தாக்குதலுக்குள்ளான ஐந்தாவது எண்ணெய்க் கப்பலென்று தெரிவிக்கப்பட்டது. குவைத்தில் இரு சரக்குக் கப்பல்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

வளைகுடாப் பிராந்தியத்தில் போக்குவரத்திற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் குறித்து வளைகுடா நாடுகளில் வெளிநாட்டமைச்சர்கள் சவூதி அரேபியாவில் ரியாத் நகரில் கூடி ஆராயவுள்ளனர். இவர்களின் சந்திப்பு இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல வளைகுடா நாடுகளும் வளைகுடா நெருக்கடி குறித்துக் கவலை தெரிவித்திருப்பதுடன் போர்களில் இறங்கியுள்ள ஈரான், ஈராக் ஆகிய வற்றையும் கண்டித்துள்ளன. (கி)

சிறுமி குறித்து பொலிஸில் புகார்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டையிலுள்ள கழாவடி என்ற இடத்தில், க. பரமேஸ்வரன் என்பவரது இல்லத்தில் வசித்துவந்த மணி அல்லது ராணி என்று அழைக்கப்படும் பதினான்கு வயது மகளைச் சிறுமி திடீரெனக் காணாமல் போய்விட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறுமியின் தற்போதைய வயது 14. மகளிடம் தனது மகன் கண்டுபிடித்துத்தருமாறு கோருகிறார்.

கமரூனில் 46 பேருக்கு மரணதண்டனை!

எண்டன், மே 17

மேற்கு ஆபிரிக்க நாடான கமரூனில் 46 பேருக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர்கள் அனைவரும் அண்மையில் இங்கு இடம்பெற்ற அரசைக் கவிழ்ப்பதற்கான சதி முயற்சியில் இறங்கியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது

இத்துடன் மேலும் இருநூறு பேருக்கு இருபது வருடச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது சதியில் ஈடுபட்டவர்களெனக் கருதப்படும் மேலும் முப்பத்தைந்து பேர் கடந்த வாரங்களில் அங்கு மரண தண்டனைக்குள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது மேற்கு நாடுகளின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மனித உரிமைகள் பாதுகாப்பு நிறுவனம், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன இம்மரண தண்டனைகள் குறித்துக் கவலை தெரிவித்திருப்பதுடன் இவைபற்றி ஆராய்ந்து வருகின்றன. (கி)

தொலைபேசி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ம.நே. க.சங்கங்களுக்குள் சபை கூட்டங்களுக்கு செல்லவேண்டாம் என உதவி கூட்டுறவு ஆணையாளருக்கு தொலைபேசி மூலம் இனந்தெரியாத நபரால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாக வெளிநாடுகளிற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். ம. நே. க. ச. சங்கங்களைமைப்பிடம் இந்த தொலைபேசி மறுமுனையில் போலியானவை என்றும் சங்கத்திற்கு இருக்கும் தகுதியற்ற ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கு ஆணையாளர் உத்தரவு பிறப்பித்து விட்டார் என்ற அச்சத்திலேயே இதனைக் பெறுவதாகவும் கருதுகிறது சங்கங்களைமைப்பிடம் இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. (வா)

"வேலைவாய்ப்புப் பெற சுருக்கெழுத்து அவசியம்"

(புதுவை)

"சமகிதம், நாடியம் போன்று சுருக்கெழுத்தும் ஒரு கலையாகும். கிரகிக்கும்தன்மை பொறுமை, சலிப்புத் தன்மை ஆகிய பயிற்சி என்பன இருந்தால் சுருக்கெழுத்து மிக இலகுவான பாடமாக அமையும்". இன்றைய நிலையிலே இளைஞர், யுவதிகள் சுருக்கெழுத்து நட்டமான பயிற்சியினை மேற்கொள்வது வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவுக் வழிவகுக்கும்.

இவ்வாறு, யாழ். பல்தொழில் நுட்ப நிறுவன தமிழ் சுருக்கெழுத்துக் கிரேஷ்— போதனாசிரியர் திரு. எஸ். இராமலிங்கம் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கத்திலுள்ள இளைஞர், யுவதிகளிடை நடாத்தி முடிக்கப்பட்ட இலவச ஆரம்பத் தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சிநெறி ஆரம்ப விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வல்வெட்டி விளையாட்டுக் கழகத்திலே நடைபெற்ற இவ்விழாவிற்கு வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கத் தலைவர் திரு. எஸ். சோதிராஜா தலைமை தாங்கினார். யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். சுவாமிநாதன், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் ஆகியோர் மக்களை விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து உரையாற்றிய திரு இராமலிங்கம் குறிப்பிட்டதாவது:

தற்போதைய பாடத்திட்ட

(கடைசிப் பக்கம் பார்க்க)

ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு:

சோவியத்துடன் ஹங்கேரியும் சேர்ந்துகொண்டது!

லாஸ்வேகாஸ், மே. 17

சோவியத் யூனியன் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் பகிஷ்கரிப்பில் ஹங்கேரியும் நேற்றுச் சேர்ந்துகொண்டது. இதுவும் சோவியத் சார்பு கம்யூனிஸ்த நாடென்பது குறிப்பிடத்தக்கது.

போலந்து, ருமேனியா தவிர்ந்த ஏனைய சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் நாடுகளும் சோவியத் யூனியனுடன் ஒலிம்பிக் பகிஷ்கரிப்பில் இறங்கியுள்ளன. மேற்கு குறிப்பிடட இரு நாடுகளும் தமது நிலையைப் பரிசீலனைசெய்து வருகின்றன இவையும் பகிஷ்கரிப்பில் பெரும்பாலும் கலந்துகொள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை சோவியத் யூனியனின் ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு முடிவில் ஏற்பட்ட மாற்றமும் காணப்படவில்லை. அமெரிக்காவும், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியும் சோவியத் யூனியனின் இம்முடிவை மாற்றுவதிலேயே முயன்றுவருகின்றன. (வி)

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு தேடித்தரும் ஏஜன்டுகளே!

உங்களுக்கு
ரெலெக்ஸ் வசதி இருப்பின்
பிறநாடுகளில் உங்கள்
அந்தஸ்து உயர்வடையும்.
குளோபல் ரெலெக்ஸுடன்
இணைந்து
நீங்களும் ஓர்
ரெலெக்ஸ் சொந்தக்காரர் ஆகுக
ரூபா ஆயிரம் மட்டுமே
முதற்கண் செலவாகும்.
இதர விபரங்களை
எம்மிடம் விசாரித்து அறியுங்கள்
★ ★ ★ ★ ★
குளோபல்
127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். தபாற்கந்தோருக்கு அருகாமையில்)
★ ★ ★ ★ ★
குளோபல்: வியத்தகு விரைவு
ரெலெக்ஸ்: நடுநிலை குன்று நம்பகத்தன்மை

கச்சதீவுக்கருகில்

இராமேஸ்வரம் மீனவர் மீது தாக்குதல், மீன்கள் அபகரிப்பு

சென்னை, மே. 17

இராமேஸ்வரம் மீனவர்களின் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இவர்களிடமிருந்த பதினைந்து விரால் ரூபா பெறுமதியான மீன்களையும் இவர்களிலிருந்து ஆயுதங்கள் எடுத்துச்சென்றுள்ளனர். என்று புகாரிடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான இராமேஸ்வரம் மீனவர்கள் இராமேஸ்வரம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

ஆறு விசைப்படகுகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இம் மீனவர்கள் கச்சதீவுக்கு அருகாமையில் வைத்தே இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டனர். என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இந்திய மாநில அரசு விசாரணை செய்துவருகின்றது இந்திய வாதாபாடு அமைச்சுக்கும் இவ்விவகாரம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது (வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நான் வாலிபனாயிருந்திருக்கிறேன்; இப்போது முதியனுமாயிருக்கிறேன். ஆனால் நீதிமான் புறக்கணிக்கப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் கண்டதில்லை.

—பைபிள்

நமது நோக்கு

யாழ்ப்பாணத்தின் கல்விக்கு சோதனைகாலம்

'யாழ்ப்பாணத்தின் இன்று கல்விக்கு மகுடந்தான் சோதனைகாலமா?' என்ற கேள்வி இந்நாளுந் தொடக்கியதும் குறைந்திடுகிறது.

இக்காலமட்டு வாழ்வில் எதிருற்றாரன் இன்று சோதனையிலிருக்கிறான்? பொருளிருந்தது தொடக்கம் படுக்கைக்குப் போகும்வரை கவிருடனிருந்தான் என்னென்ன சோதனைக்குப் பொருளாக்கள் கஷ்டப்கிறார்; பவிசாகிறார்களோ கடவுள்!

காலங்கடந்து எல்லாம் போது வெகுவாகவிட்டமையினால் யாழ்ப்பாணத்தில் கல்வி தொல்லையையும் சேர்த்துக் கொள்கிறோம். யாழ்ப்பாணப் பள்ளிக்கழகத்தில் கிராமியமும், பொறியியல்பீடமும் கிளிநொச்சியில் ஆரம்பமாக இருப்பதுதான் அதற் காரணமல்ல.

பெரிய யாழ்ப்பாணம் என்றொரு விசாலமான அபிவிருத்திக்கிடமாக செறிபடுவதிருக்கையே இலங்கை வாழ்தமிழ்மக்களுக்குவாழ்வாணம் தொடர்ந்தும் வழிகாட்டியாக இருக்கமுடியும்: இன்றைய 'பகிரங்கரகசியம்' நீர்மேல் எழுத்து.

கல்லூரி, முன்னேற்றிவு, திருகோணமலை, மகிடக்களப்பு குறிப்பாக கல்வித் துறையில் முன்னேற யாழ்ப்பாணத்தில் கல்வித்தரம் என்றும் தழம்பாது காலத்தின் தேவைக்கேற்ப துரிதமாக வளரவேண்டும்.

யாழ்ப்பாணத்தின் தனித்துவ கல்வி நிலை ஏனைய தமிழ் மாவட்டங்களின் உயர்ச்சிக்கு வழிகோலவேண்டும். போட்டிக்கு இடமளிக்கலாகாது.

யாழ்ப்பாணப் பள்ளிக்கழகம் வந்ததுக், மகிடக்களப்பு பள்ளிக்கழகங்கள் லூரி பிள்தொடரவேண்டிய தேவை அதனைப் பூர்த்திசெய்யவாயிற்று.

கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வி நிலை பற்றிக் கிந்திக்கத் தூண்டும் மூன்று பெருக்கவங்கள் குறிப்பிடத் தக்கன.

பொதுவாக யாழ்ப்பாணத்தில் மிகச் செழிப்புற்று வளர்ந்த கிரேகிட கல்லூரிகள் கொழும்பைத் தவிர இலங்கையில் வேறெங்கும் மிகவாக அவ்வளவு கல்வி வளர்ச்சிக்கு விருத்திட்டன. கிறிஸ்துவமிஷனும் இந்துக்களின் பரோபகாரமுமே இவ்வித வளர்ச்சிக்கு முக்காரணம்.

இலங்கை பள்ளிக்கழகத்துக்கும், அதற்கு முன்னோடியான பள்ளிக்கழகங்களுக்கும் பலவளித்தது யாழ்ப்பாண மாணவர், ஆசிரியர் பலரின் அற்புதசாதனைகள். அப்படியிருந்தும் சமீபகாலத்து வருடங்களுக்கு முன்பே யாழ்ப்பாணவாசிகள் ஆரம்பாரவதெல்லாம், கல்விச் செல்வம் நிறைந்த இப் பிரதேசம் வாலிபவயதினரும் கதியிலிருந்து தம்பிவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

நான் குறிப்பிட்ட வயதவர்கள், எவ்வாறு ஒரு கூர்தர கிரேட்ட கல்லூரி தலைமையுடைய மாணவர் மனதை பள்ளிக் கழகத்துக்கு நெறிப்படுத்துவதையும், அத்தகைய மாணவர்கள் பல்கலைக்கழக வாசியிருந்தும் பாரபக்ஷத்துக்குள்ளாகி வாழ்க்கையில் தாம் நிராதரிக்கப்படுவதையும் விளக்கின. இவ்ஞாயிறுதாரகை ஒன்று பவிசாகி விட்டது.

இன்னொரு சிந்தனை இதனிலும் பார்க்க முக்கியமானது.

வடமாநில கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பான கல்வி அதிபதி கிமி மாகிய இன்றைய குறைவை உருவாக்கியிருக்கிறார். தர்மம் ஆர்ப்பணிக்கும் மனமும் கல்வித் திறமையுமுடைய அதிபர்கள் நாம் இழந்து வருகிறோம். ஒருவரின் ஒருவராய் ஓய்வு பெறுவது பாடசாலைகளில் ஒரு பெரும் வெறுமை ஏற்படுத்தும்வண்ணம் அமைகிறது.

இதில் பெரிய கவலை உண்டு. திறமைசாலிகள் ஆசிரியத் தொழிலுக்கு வெளியூர் செல்வது நாளுக்நாள் கூடிவிடலாம். இருப்பினும் இக்குறைவர்களுக் இந்தப் பெருவெளியை நிரப்பு தற்கு தகுதிப்பாடு ஏற்படுவதால் கல்வித்தரம் எதிர்காலத்து வளர்ச்சிக்குப் பாதிப்படையும்.

கடந்தகால அதிபர்களைப் போல இனி எவரையுங் காண முடியாதென்று நான் கூறமாட்டேன்.

யாழ்ப்பாணத்தில் பிரபலம் பெற்ற கல்லூரிகள் ஆலவிருட்சமாக நாடுதுக் கேற்ற பதவிகள் மறுக்கப்பட்டு வருவதால், சீர் குலைந்து வருகின்றன.

நாடுபடுத்தக்கூடிய ஒரு திறமைவாய்ந்த பாடசாலை நிர்வாகத்திலும் காணப் படுவதை ஒரு உதாரணங் காட்டி விளக்குவது இலகு.

ஆகில இலங்கைத் தரமுடைய கல்லூரி ஒன்றில் அதிபர் மாவட்ட கல்வி அதிபதியின் தரத்துக்கும் சம்பளத்துக்கும் உரியவரென்று கொள்ளப்பட்டது. ஆனால் இவ்வித கல்லூரிகள் ஆகில இலங்கை ரீதியில், யாழ்ப்பாணத்தில் அதிகமானதால் கழிக்கப்பட்ட உயர் பதவி புதிய அதிபருக்கு மறுக்கப்பட்டது. மிகக் பிரயாசமான பாடசாலை ஒன்று குறைவதற்கு வழி வகுக்கப்பட்டது.

அரசின் நிர்வாகத்தில் வந்த இன்னொரு பாடசாலை மிகச் சாதாரண நிலையிலிருந்து நாடுதுக் பெரும் பாடசாலைகளின் நிலைக்கு வளர்ந்தது! அதிபரின் ஆளுமை இவ் வளர்ச்சிக்கு முக்கியமானது. [illegible] பெற்றுவருகிறது.

ரண்டு வருட நிர்வாகத்தில் ஆவலுக்கு நிரந்தர அதிபர் பதவியே கிடைக்கிறது.

அரசாங்க நிருவாகத்தில் பாடசாலைகள் இருபது ஆகியன, ஆனால் அரசாங்க ஏகபோகத்தை ஆனுமதியாது மக்கள் பாடசாலைகளாக, மக்கள் பள்ளிக் கழகமாக வளர்ச்சியடைய [illegible] ஆதரவு [illegible] பெறுவதாகும்.

இனப்பிரச்னையை
இனிமேலும் தாமதமின்றி தீர்த்துவைப்பது அவசியம்

யாழ்ப்பாணத்தில் நடந்த வடக்குத் நாடகள் ஐந்து தினங்களில் பிரதி ஆலமரிவாக முடிவடைந்திருப்பது அனைவருக்குக் ஆறுதலளிப்பதாகும்.

வடக்குத்தம்பிடும் பாண்டவர்களாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்க இளந் தம்பதி நலனுடன் திருப்பியிருக்கிறார்கள்.

இலங்கையில் முதல் தடவை யாக நடந்த ஆன் வடக்குத் மீண்டும் ஒரு முறை நடைபெறக் கூடாது. இச்சம்பவத்திலிருந்து இலங்கையில் இனப் பிரச்னைக்கு இனியும் தாமதமின்றி ஒரு நல்ல முடிவைக் காணவேண்டுமென்பது அவசியமாகிவிட்டது.

அமெரிக்கத் தம்பதியர் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த சமயம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமிய வைத்தொழில் ஆலைச்சங்கமான திரு. எஸ். தொண்டமான் விடுத்த வேண்டுகோளில், "இனப் பிரச்னைக்கு கூடிய விரைவில் நிர்வாணப்படவேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்துவது வடக்குத்தலைவர்களின் நோக்கமாக இருந்தால் அந்த நோக்கத்தை அவர்கள் அடைந்தாகி விட்டது" என்று குறிப்பிட்டிருந்தார்.

"வடக்குத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அறிக்கை வெளியிட்டுள்ளார். இதனைக் வடக்குத்தலைவர்கள் கிரத்தையுடன் கவனிக்கவேண்டும். பேச்சுவார்த்தைகள்மூலம் முடிவுகாண்பதே சிறந்ததாகும். மோதலுக்குப் பதிலாகப் பரஸ்பரம் பேச்சுவார்த்தையே பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுத்தும்" என்றும் திரு. தொண்டமான் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஒரு நல்ல சமுதாயான, நிரந்தரமான தீர்வு காணும் நோக்கத்துடன் உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் பலவற்றிலும் அதிக நம்பிக்கையை ஏற்படுத்திக் கூறப்பட்ட சர்வகட்சி மாநாடு வட்ட மேசை மாநாடாக மாறியும் எந்தவித நம்பிக்கையும் இல்லாதவகையில் இன்னமும் நீடித்துவருகிறது. மாநாடு ஒன்றரை மாத இடைவெளிக்குப் பின் செற்றமாநாட்டுக் போக்கில் ஆவலுடன் அதிருப்தியடைந்துள்ளதாகவே அந்த அறிக்கையை எடுத்துக் கூறின.

பேச்சுவார்த்தைமூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதில் தமிழ்த் தலைவர்கள் என்றுமே நம்பிக்கை கொண்டிருந்தவர்கள். வட்டமேசை மாநாடுமூலம் தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்பதை ஆரம்பகாலம்முதல் வற்புறுத்திவந்தவர் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

"பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்போம் இன்றைய எமது சந்ததியினருடன் இப்போதே பேச்சுவார்த்தைகள்மூலம் ஒரு நல்ல தீர்வுகாணப்படவேண்டும். எமக்குப் பின்வரும் சந்ததியினர் எக்கைமப்போக்கிலிருக்கவேண்டுமென்று சொல்லக் தகுதியில்லை" என்று அடிக்கடி வெகுஜனங்களைச் சமூகத்தவர்களுக்குக் கூறியிருந்தவர் முதறிஞர் எம். ஜே. வி. செல்வநாயகம்.

பலவிதங்களிலும் பாதிக்கப்பட்டுவரும் தமிழ் இளைஞர்கள் தலைவர்களின் மிதவாதப் போக்கினால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்று நம்பிக்கை இழந்த நிலையில் தீவிரவாதத்தை மேற்கொண்டனர்.

எப்படியும், வட்டமேசை மாநாடு உருப்படியான, பயனுள்ள ஒரு தீர்வை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை இளைஞர்கள் மத்தியிலும் ஏற்

(5ம் பக்கம் பார்க்க)

எஸ். எம். ஜி.

ஒன்பதாம் தேதி கூடியபோது மாநாடு நியமித்த தீர்வானித்த நிபுணர்குழுவில் அங்கம் வகிக்கத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் மறுத்துவிட்டன. மாநாட்டுக் அதன்றைய கூட்டத்தின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. ஆ. அமிர்தலிங்கமும், தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலமும் விரிவான அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

திருமுறைகளைத் துதித்து வாகன மேற்றித் திருமுறைத் திருவிழா!

திருக்கேதீச்சரத்தில் ஆறும் திருவிழா பிரசாதனத் திருவிழாவாகும். இன்று மாலை பூசைக்கு முன்னர் பிரசாதன மூர்த்திக்கு விசேட பூசை நடைபெறும். தொடர்ந்து பிரசாதனப் பெருமான் வீதி உலாவருவார்.

ஆலயங்கள் அவரின் வாயிலுக்கு பிரசாப் பாத்திரத்தில் தமது காணிக்கைகளை இடுவார்கள், ஆலய வெளிவீதியிலும் பிரசாதன மூர்த்தி உலாவுவார். பாடாக இருந்தல் வேண்டுமென்பதே பிரசாதன மூர்த்தி விருப்புவதாகும்.

பக்தோற்சவம்

திருக்கேதீச்சரம் பெருமானின் திருவிழாவில் 8ம் திருவிழா பக்தோற்சவமாகும் அன்று மாலைத் திருவிழாவில் சந்திரசேகர் பெருமானுடன் நாயன்மார் சேக்கிழார் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். வழக்கமாக இரவும் காலும் பிள்ளையார், சுப்பிரமணியர், [illegible] மணியடியாகி ஒரு மணவயதாக [illegible] வந்தவர்கள் போல் இருந்தனர்.

திருமுறைத் திருவிழா

8ம் திருவிழாவன்று மாலைப் பூசைக்கு முன்னர் திருமுறை திருவிழா நடைபெற்றது. இத் திருவிழாவைக்கண்டு இரசித்த மகிழ்ந்த பலர் தத்தம் ஆலயங்களிலும் திருமுறைக்கு விழா எடுக்க வேண்டும் என ஆசைப் பட்டார்கள்.

மாலைப் பூசைக்கு முதல் நடைபெறும் பிரதோஷகாலமாகிய 1ம் காலப் பூசை நடைபெற்றதும் அழகிய கிரிய இடபவாகனத்தில் திருமுறைகளை வைத்து விசேட பூசை செய்தார்கள். பின் ஆலய மேனாள் வாத்தியங்களுடன் வீதி வலம் வந்தது..

திருமுறைகள் இராசகோபுர வாசலுக்கு வந்ததும் திருமுறைவல்ல ஓதுவார் இருவர் எடுத்து பட்டுக்கட்டி கரிவரைதை செய்ததும் முன்னர் பாடிய முதற்

பாலாவிக்கரையினிலே — 8

ஒவ்வொருவரினதும் அகவன்பை இறையன் பாகிப்பதே பிச்சடான மூர்த்தியின் இடபிச்சை கேட்கும் வழக்கத்தின் அர்த்தமாகும். மணமாலையும் பண்டமாலையும் கொடுக்கப்படுபவை அக அன்பின் வெளிப்

அம்பிகை, சோமஸ்கந்தர், சண்டேசுரர் ஆகிய ஐந்து மூர்த்திகளும் எழுந்தருளி உலா வருகின்றனர்.

7ம் நாள் திருக்கல்யாணத் திருவிழா நடைபெற்ற பின்

திருக்கேதீச்சரத்திலிருந்து நமது சிறப்பு நிருபர் தி. பொன்னம்பலவாணர்

னரே வந்த மகிடம் பூசை நடைபெற்றது. 7ம் நாள் இரவு எழுக்கமாகப் புறப்படும் உஞ்சமூர்த்தியுடன் கலியாண சுந்தரமூர்த்தியும் எழுந்தருளினர்.

மிகப் பொலிவான தோற்றமுடைய கலியாண சுந்தரர் பெருமானின் புறப்பாடு தேவர்களான மனைவியரான இரு பதிகளுடன் ஒரு [illegible] ஒரு [illegible] ஒரு [illegible]

இனிமேலும் தாமதமின்றி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டாயமாகவிருப்பதற்கு நாடு விடுதலை அடைந்த நாளிலிருந்து ஆட்சிபீடத்தில் மாறி மாறி அமர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே பொறுப்பேற்றாகவேண்டும். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரண்டு கட்சிகளுமே மொழிப்பிரச்சினையையும் வளர்த்துவந்தன.

இன்று இனப்பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காணவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுள்ளது.

இச்சமயத்தில் முன்னாள் பிரதமருக் சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சியில் தலைவியாகவிருக்கிறார். திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பண்டாரவன்னியில் கடந்த சில தினங்களுக்குமுன் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில்-

"எனது ஆட்சிக்காலத்தில் பண்டாரவாதம் தலைதூக்கமுடியாமல் திட்டவட்டமான நடவடிக்கைகளை நான் எடுத்தேன். இன்றைக்கோ நாட்டில் பண்டாரவாதம் தலைவிரித்தாடுகிறது. அதைக்கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் தடுமாறுகிறது. பொத்தவாகக் கூறவேண்டுமானால் நாட்டை வழி நடத்த இந்த அரசாங்கத்தினால் முடியாது. எனவே நான் ராஜினாமா செய்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்துமாறு நான் கோருகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

1960-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டுவரையும் பின்னர் 1970-ம் ஆண்டுமுதல் 1977-ம் ஆண்டுவரையும் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா. 1972-ம் ஆண்டில் இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்துவதற்காக புதிய அரசியல் அமைப்பைக் கொண்டுவந்தவர். அப்போதே இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வைக்காண்பதற்கு அவர் நினைத்திருந்தால் வழி பிறந்திருக்கும்.

ஆட்சிபீடத்திலமர்ந்த அரசாங்கங்கள் யாவும் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் மதிப்புக்கொடுத்ததே இல்லை. ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களின் தீர்ப்பைக் கிறபான்மையினர்மீது திணிப்பதுதான் என்பதே இந்து ஆக்கிரமிப்பு பிக்குமார் கொள்கையாகும்.

1970-ம் ஆண்டில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக அரசியல் நிர்ணய சபை கூடியபோது அதன் ஜூன் மாதம் 21-ந் திகதி கூட்டத்தில் அப்போது ஊர்காவற்றுறைத் தொகுதி உறுப்பினராக இருந்த திரு. வ. பொ. இரத்தினம் ஒரு கூட்டத்தில் பேசுகையில்-

"...நீங்கள் சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அதிகாரத்தை நாங்கள் மதிப்பது போல், நாங்கள் தமிழ் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை நீங்கள் மதிப்பீர்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. சிங்கள மக்களின் தலைவர்களும் தமிழ் மக்களின் தலைவர்களும் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரங்களுக்குப் மரியாதை உண்டாகவும், ஒரினத்தை ஒரினம் அடக்கி ஆளாமலும், அரசியலமைப்பு ஆக்கப்படுவதென்ற நம்பிக்கையிலுமே நான் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்க முன்வந்தோம்" என்று கூறியிருந்தார்.

அன்றே இந்தச் சந்தர்ப்பத்தை திருமதி சிறிமா அரசு சரியாகப் பயன் படுத்தியிருந்தால் இன்று கலவரமே சிரிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?

நிதி அமைச்சர் கூறும் யோசனை

"இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் சிறுபான்மையராக இருக்கிறார்கள். அவர்களுக்குச் சில குறைபாடுகள் உள்ளன. அவர்கள் பெரும்பான்மையர் மீது கொண்டுள்ள அச்சமும் அவநம்பிக்கையும் கொள்கிறார்கள். இந்தியாவில் இலங்கையில் வாழும் ஒரு கோடி இருபது லட்சம் சிங்கள மக்கள் தங்களுக்கு இந்த நாட்டைத் தவிர வேறு நாடு எதுவும் இல்லையென்றும், தங்கள் மொழி, இனம், கலாசாரத்தைப் பாதுகாக்கவேண்டுமென்றும் கருதுகிறார்கள். தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள ஒரு கோடித் தமிழர்களைத் தங்களுக்கு ஆபத்து ஏற்படலாமென அவர்கள் ஐயமும் அச்சமும் அடைந்தவர்களாவர். இந்தியாவில் வாழ்ந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள்மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும்" என்று நிதியமைச்சர் திரு. ரொனிடிமெல் அளுத்கமகே என்ற இடத்தில் நடந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று எல்லோருமே கருதுகிறார்கள்.

ஆனால் வட்டமேசை மாநாடு கூடப் பல மாதங்களாகியிருக்கிறது. சில கட்சிகள் அந்த மாநாட்டிலிருந்து வெளியேறிவிட்டன. நடைபெறப்பட்ட இரண்டு இடைநிறுத்தங்களிலும் சேர்ந்தவர்கள் இம்மாநாட்டிற்கு அழைக்கப்படவே இல்லை. "மாநாட்டில் இதற்கு மேல் எதுவும் நடவாமலேகூட" என்று பொதுப்புத்தி அவர்கள் மனதில் தெரிந்துவிட்டார்கள்.

இந்நிலையில் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்று திருப்பித் திருப்பிச் சொல்வதால் என்ன பயன்?

திருமதி சிறிமாவோ கூறும் தீர்வு!

நாட்டில் இனப்பிரச்சினை இன்று மிகவோசமான கட்டத்தை அடைந்திருப்பதற்கு நாடு விடுதலை அடைந்த நாளிலிருந்து ஆட்சிபீடத்தில் மாறி மாறி அமர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே பொறுப்பேற்றாகவேண்டும். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரண்டு கட்சிகளுமே மொழிப்பிரச்சினையையும் வளர்த்துவந்தன.

இன்று இனப்பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காணவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுள்ளது.

இச்சமயத்தில் முன்னாள் பிரதமருக் சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சியில் தலைவியாகவிருக்கிறார். திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பண்டாரவன்னியில் கடந்த சில தினங்களுக்குமுன் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில்-

"எனது ஆட்சிக்காலத்தில் பண்டாரவாதம் தலைதூக்கமுடியாமல் திட்டவட்டமான நடவடிக்கைகளை நான் எடுத்தேன். இன்றைக்கோ நாட்டில் பண்டாரவாதம் தலைவிரித்தாடுகிறது. அதைக்கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் தடுமாறுகிறது. பொத்தவாகக் கூறவேண்டுமானால் நாட்டை வழி நடத்த இந்த அரசாங்கத்தினால் முடியாது எனவே நான் ராஜினாமா செய்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்துமாறு நான் கோருகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

1960-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டுவரையும் பின்னர் 1970-ம் ஆண்டுமுதல் 1977-ம் ஆண்டுவரையும் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா. 1972-ம் ஆண்டில் இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்துவதற்காக புதிய அரசியல் அமைப்பைக் கொண்டுவந்தவர். அப்போதே இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வைக்காண்பதற்கு அவர் நினைத்திருந்தால் வழி பிறந்திருக்கும்.

ஆட்சிபீடத்திலமர்ந்த அரசாங்கங்கள் யாவும் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் மதிப்புக்கொடுத்ததே இல்லை. ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களின் தீர்ப்பைக் கிறபான்மையினர்மீது திணிப்பதுதான் என்பதே இந்து ஆக்கிரமிப்பு பிக்குமார் கொள்கையாகும்.

1970-ம் ஆண்டில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக அரசியல் நிர்ணய சபை கூடியபோது அதன் ஜூன் மாதம் 21-ந் திகதி கூட்டத்தில் அப்போது ஊர்காவற்றுறைத் தொகுதி உறுப்பினராக இருந்த திரு. வ. பொ. இரத்தினம் ஒரு கூட்டத்தில் பேசுகையில்-

"...நீங்கள் சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அதிகாரத்தை நாங்கள் மதிப்பது போல், நாங்கள் தமிழ் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை நீங்கள் மதிப்பீர்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. சிங்கள மக்களின் தலைவர்களும் தமிழ் மக்களின் தலைவர்களும் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரங்களுக்குப் மரியாதை உண்டாகவும், ஒரினத்தை ஒரினம் அடக்கி ஆளாமலும், அரசியலமைப்பு ஆக்கப்படுவதென்ற நம்பிக்கையிலுமே நான் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்க முன்வந்தோம்" என்று கூறியிருந்தார்.

அன்றே இந்தச் சந்தர்ப்பத்தை திருமதி சிறிமா அரசு சரியாகப் பயன் படுத்தியிருந்தால் இன்று கலவரமே சிரிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?

"ராஜ்யசபை உறுப்பினர் ஜெயலலிதாவுக்கு

பேச்சு எழுதிக்கொடுப்பவர் 'சோலை' தான்

'துக்ளக்' சஞ்சிகையில் சோ தகவல்

(சென்னை)

"செல்வி ஜெயலலிதாவிற்கு பேச்சுக்களை எழுதிக் கொடுப்பவர் "சோலை". என்பவர் தான். அவர் எழுதிக் கொடுக்கும் பேச்சுக்களை ஜெயலலிதா அப்படியே வாசித்து கூட்டங்களில் படித்துவிட்டுப் போகிறார். கிறந்த பேச்சாளர் என்ற தகுதியை வைத்துப் பார்த்தால் "சோலை"யை பேச்சுக்களை கொடுக்க பரம்புச் செயலாளருக்கு, எழுதிக் கொடுக்கச் சொல்லி எம். ஜி. ஆர் உத்தரவிட்டிருக்கிறார். "சோலை" ஒலிபெருக்கியாக செயல்படுகிறார்".

இவ்வாறு, சென்னையிலிருந்து வெளியாகும் 'துக்ளக்' சஞ்சிகையில் "இந்தக்காட்சி- தமிழகத்தில் தாழ்வுக்கு சாட்சி" என்ற கட்டுரையில் அதன் ஆசிரியர் சோ தெரிவித்துள்ளார்

"இந்த விஷயத்தைப் பற்றி எழுதுவது 'துக்ளக்'கிற்கு எளிதாக ஏற்றதல்ல என்று நினைத்தே இந்தப் நாளும் இதைப் பற்றி நான் எழுதவில்லை. செயற்கையாக இவருக்கு கிடைத்திருக்கும் முக்கியத்துவம் விரைவில் மறைந்து போகும் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் இந்த விபரீதம், இந்த அநாகரீகம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகிறது. இனியும் இதைப்பற்றி எழுதாமல் இருப்பது முறையாக இராது. நாட்டில் ஜனநாயகம் நன்கு தழைத்து ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலை ஏற்படவேண்டுமானால், அரசியல் கட்சிகளில் எப்படிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் கிடைக்கவேண்டும்? நேர்மையானவர்கள் பலதுறைகளைச் சார்ந்த நிபுணர்கள் திறமையானவர்கள் துணிவோடு நின்று மக்களிடமே சரியான கருத்தை ஏற்படுத்தி வழி நடத்திச் செல்லக்கூடியவர்கள் தேசப்பற்றில் சிறந்தவர்கள் போன்றவர்களுக்கு கிடைத்தால் ஆரோக்கியமான அரசியல் கருத்தெழும். ஆனால் எந்தக்கட்சியும் இப்படிச் செயல்படவில்லை. என்பதால் இந்த அளவு கோலை வைத்து அ. இ. அ. தி. மு. க வை மட்டும் குறை சொல்வதில் நியாயம் இருக்காது. ஜெயலலிதா எழுதிக்கொடுக்கும் பேச்சுக்களை அப்படியே படிக்கும் போது கூட இவருடைய பேச்சில் தவறுகள் புகுந்து கர்த்தனமாகுகின்றன. பஸ்கிய தேசியமாக்கும் பிரச்சினையைப் பற்றி இவர் பேசுகையில் கருணாநிதியை ஆக்கிரமிப்பாளர் என்றும் குறிப்பிட்டுக்கூறுவதுபோல் முறையல்லாமல் போது அப்போது இவரின் பிதற்றல்கள் ஒரு உதாரணம் மட்டுமல்ல. அந்த தவறுகளுக்கும் காரணம் இவருக்கு எழுதிக் கொடுக்கும் சோலையாக கூட்டமாக எழுதிக்கொடுப்பவரை படிப்பதிலே கூட இவர் செய்யும் கோளாறுதான் காரணம் என்பது நமக்குத் தெரியாது.

இவர் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது அங்கே உரையாற்ற மேடை போன்ற அமைப்பு நிறுவப்பட வேண்டுமென கூட்ட அமைப்பாளர் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அந்த உரை மேடை மீது தரையில் தான் குனிந்து எழுதிக் கொடுக்கப்படுகிற காகிதங்களை வைத்துப் படிக்கிறார். இவர் இப்படி படித்துப் படித்துப் பேசுவது மக்களுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக அந்தக் காகிதங்களை மக்களின் பார்வையில் படாமல் இருக்க மேடையில் வைப்புப் பலகை வைக்கப்படும். எழுதிக் கொடுப்பவரையே வைத்துக் கொண்டு படிக்கத் தகுதி ஒருவருக்கு இருப்பதாக மட்டும் ஒருவரைப் பேச்சாளர் என்று சொல்ல முடியாது. வாக்கெலி அறிவிப்பாளர் வேலைக்கு வேண்டுமானால் தகுதி இருக்கலாம். கொள்கை பரப்புச் செயலாளர் நிலையும் அதுதான்" என்று 'சோ' எழுதியுள்ளார். [கெ

திருமுறைகளை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓவ்வோர் மடத்திலும் முன்னும் ஓதுவார்களின் காலங்களை ஆய்வு செய்து பூசித்தார்கள். அவர்களுக்கு உதவியாக ஆண்டிருந்தார்கள். கோடைக்காலத்தில் தங்களை கொடுத்தார்கள்.

இந்தியாவிலிருந்து ஓதுவார்கள்

திருக்கேதீச்சரத் திருமுறையை கொண்டு வேதம் வல்ல அந்தணர் ஒருவரும் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டார்கள்.

திருவிழாவில் வேதத்தை வேள்வி முதலான சிறப்புகளுக்கு மட்டுமன்றி தமிழ் வேதம் வடமொழிவேதம் ஆகிய வற்றுக்கு குதக்கால் கொடுக்கும் நேர்கூடல் திருப்பணிச் சபையை சார்ந்ததாகி திரு இ. நமசிவாயம் எடுபட்டு வருகிறார்.

8ம் திருவிழாவில் நடைபெற்ற திருமுறை விழா மட்டுமன்றி கொடியேற்றம் முதலாக தீர்த்தம் வரை 10நாட்களும் திருவிழாக்களில் அதன்வாக நடுத்தரம் கொண்ட

தையல் பயிற்சி பாடசாலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரத்தில் வறுமை பயிற்சி பாடசாலை கொண்ட அரசால் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் கே. குணராசா மேற்கொண்டுள்ளார்.

கனகபுரம் கிராம முன்னேற்றச் சங்க கட்டடத்தில் இப் பாடசாலை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சிப் பாடசாலையில் சேர்ந்து வறுமை பயிற்சி பயில விருப்பமுள்ளோரை தெரிவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது.

புராண படனம்

நடைபெற்றது. புராணப்படன முடிவில் மாலைப் பெருமானுக்கு விசேட வழிபாடு நடைபெற்றது. (தொடரும்)

VACANCY — ACCOUNTANT

எமது நிறுவனத்தின் கணக்குப்பகுதியைப் பொறுப்பேற்பதோடு நிர்வாகத்திலும் நன்கு பங்கேற்கக்கூடிய கணக்காளர் ஒருவருக்கு வெற்றிடமுள்ளது.

பகுதிநேர அல்லது முழுநேரமான கல்வித் தகைமையுடன் முன் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.

31-5-84 இன் முன் பூரண விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிரெட்,

43, யாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2, ஞானார்த்தபிரதீபமாவத்தை, த.பெ.இல.9
(முன்னாள் மருதடிலேனுக்கு) கொழும்பு 8.
தொலை பேசி: 5979659

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தல் சம்பவம்

துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயம், இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடத்தலில் ஈடுபட்டிருந்த மூவரில் ஒருவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகிக் காயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்ற இருவரும் கைதுசெய்யப்பட்டு இராணுவத்தினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைக் கடற்பகுதியிலேயே இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடற்படையினரால் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட தாகக் கருதப்படும் இயந்திரப் படகும், பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை ஆலடியைச் சேர்ந்த நாகேந்திரம் பிள்ளை விஜயகுமார் (35 வயது) என்பவரே காயமடைந்தவராவார். இவருக்கு இடதுகை மூட்டுக்குக் கீழ் முழங்கைக்கு மேல் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இவருடன் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கே. குணபாலசுந்தரம், நீ. பரமானந்தராசா ஆகிய இருவரும் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனரென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்தவர்களாம்.

காயமடைந்தவர் பொலிசாருக்கு அளித்தகாவலில் சட்டவிரோதமாக, கஷ்ட நிலையிலுள்ளதாம், சகோதரர் வாழ்வுக்காக கடத்தலுக்கு உதவியாளராகச் செல்வதாகவும், சம்பவதினம் இரவு 8 மணியளவில் மற்றும் இருவருடன் இந்தியாவுக்குச் சாறிச்சட்டைத் துணி கடத்திச் செல்லும்பொழுது வெடிச்சத்தம் கேட்டதாகவும் அடுத்த தனது இடது கைப் பகுதியில் காயம் ஏற்படுகின்றதாகவும் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மூவரும்பிள்ளை 18-ம் திகதி பிற்பகல் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு, யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்படுகின்றதாகவும் அவர் தெரிவித்தார். (மா)

இன்றைய பலன்

மாதம்—வைகாசி
திதி—5 (18-5-1984)
வாரம்—வெள்ளி
திதி—திருதியை காலை 8.23க்கு மேல் சதுர்த்தி
நட்சத்திரம்— மூலம் பிற்பகல் 3-59 வரையும்

மேடம்: ஆரம்பத்திலே முட்டுக்கட்டை போடுபவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள். காதல் ஜோடிகளுக்குப் பொருள் நிலை.

இடபம்: அந்த நற்பிள்ளை ஆபத்தைத் தேடித் தரலாம் நல்லவரே நலக்குறவி என்று சொல்லாற்றவும்.

மிதுனம்: பிள்ளைகளின் நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப்படுவீர்கள் கவர்ச்சிகரமான நிலை.

கடகம்: தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழி கோலப்படலாம் இதன் மூலம் பதவி உயர்வும் கிடைக்கலாம்.

சிங்கம்: புத்திரர்களாலும் புகழுக்கு இடமுண்டு வீட்டில் வைபவங்கள் இடம்பெறலாம் சுபநாள்.

கன்னி: நதிவெருமை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும் பொருளும் பணவழியிலும் செலவாகும்.

துலாம்: சிறுவிடயங்கள்கூட அதிக ஆத்திரத்தை தரலாம் வீணான சந்தேகங்களுக்கு நட்புக்கும் இடந்தரவேண்டாம் செலவாற்றல்.

விருச்சிகம்: சொந்தம்பந்தம் ஆடுவதன்மூலம் மற்றவர்களின் சொத்து வைப்பீடுகள் சிலர் தேர்தல் விவரங்களிலும் ஈடுபடலாம்.

தனுசு: இந்தவிதி ஆண்களின் மத்தியில் சிரமப்படுவீர்கள் எதிலும் விரக்தமனப்பான்மை தென்படும் பொருளும் செலவாகும்.

மகரம்: நாம்பழகினால் வெறுமனவே சேரும் தனத்துடன் வாழ்வும் கிடைக்கும் எதிரிகள் உங்களை வரவேற்பார்கள்.

கும்பம்: வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரர்களால் பெரு மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

மீனம்: பூமி பிணக்குகளால் வழக்கு விவரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் வரவைக் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

ஐஸ் தட்டுப்பாடு

(மன்னார்)

பேசாலைப்பகுதியில் ஐஸ் கட்டிகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மீனவர்கள் பிடிக்கும் மீன்வகைகளை வாதுவத்து வெளியூர்களுக்கு அனுப்பமுடியாத நிலைஏற்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர ரதோற்சவம் யாத்திரீகர்கள் குறைவு!

(மன்னார்)

திருக்கேதீஸ்வரக் குளத்தில் நடைபெற்ற ரதோற்சவத்தில் கடந்த வருடங்களைவிட இவ்வருடம் குறைந்தளவு யாத்திரீகர்களே கலந்து கொண்டனர்.

திருக்கேதீஸ்வர குளத்தில் ரதோற்சவம் கடந்த திங்கள் கிழமை நடைபெற்றது.

இவ்வுற்சவத்தில் சுமார் 10 ஆயிரம் யாத்திரீகர்களே கலந்து கொண்டனர். வெளிபூர் யாத்திரீகர்கள் மிகவும் குறைந்தளவிலேயே கலந்து கொண்டார்கள்.

மரணவிசாரணை அதிகாரி இல்லை

(மன்னார்)

வடக்கு பகுதியிலுள்ள அதிகாரி அற்றியுள்ள அதேக் கிராமங்களுக்கு நாலு வருடமாக மரண விசாரணை அதிகாரி இல்லாதநிலை இப்பகுதியில் ஏற்படும் சடுதி மரணங்களை நேரடியாக விசாரணைகளை உடன் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

ரூபவாஹினியில் இன்று

மாலை	
5-30	நாடகவிளக்
5-35	இசைநிகழ்ச்சி (கிளைகள்)
6-00	விளையாட்டுப் பயிற்சி
6-30	கலை நிகழ்ச்சி (கிளைகள்)
6-55	செய்திகள் (தமிழ்)
7-15	"குளிர் பானம் ஒலிபரப்பு"
7-45	கிளை நிகழ்ச்சி
8-15	செய்திகள் (கிளைகள்)
8-35	எதிர்வரவு நிகழ்ச்சிகள்
9-05	பிரிட்டன் எல். ஏ. கிளை போலீஸ்
9-30	செய்திகள் (ஆங்கிலம்)
9-50	"எல் ஏ, கிளை போலீஸ்" தொடர்ச்சி
10-40	உலகச் செய்தி தகவல்கள்
10 55	அமெரிக்க இருதயநோய் சிகிச்சை நிபுணருடன் கலந்துரையாடல்.

கிராம சேவையாளர் இடமாற்றம்

(வவுனியா)

மே மாதம் முதல் வவுனியா மாவட்டத்திலுள்ள சில கிராமசேவையாளர்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

உத்தியோக பூர்வமாக சமகிராம சேவையாளர்களுக்கு தமது இடமாற்றப்பகுதிகளுக்குச் சென்று கடமையினை ஏற்றுள்ளார்களா கிராமசேவையாளர் சங்கத்தலைவர் திரு. வி. எஸ். விசாலப்பெருமாள் தெரிவித்தார்

இடமாற்றம் பெற்றோர் விபரம் வருமாறு:

திரு எம். பாலநாதன் (புதுக்குளம்), திரு. எஸ். தர்மராஜ (நொச்சிமோட்டை). திரு ஜி. ஜி செல்வராஜா (ஆண்டியாபுளியங்குளம்), திரு எஸ் ராஜரட்ணம் (கூ செ த புளவு) ஜனாப் ஐ எம். சரீவ் (முதலியாகுளம், திரு. ரி தவராசா (பரந்தன்), திரு. ஏ எம். வேலராஜா (நெளுக்குளம்), திரு. எஸ் தெம்பரப்பிள்ளை (ஊஞ்சலாங்கட்டி). திரு ரி தேவராஜா (மெல்லவிளையாலங்குளம்) திரு ரி ஆனந்தன் ஒயிலை), திரு எம். திருஞானசுந்தரம் (மருதமடு), திரு வி எஸ் விசாலப்பெருமாள் (வவுனியா நகரம்) ரி பரமசிவப்பிரணவம் (ஆகிகுளம்), செட்டிகுளம் மகுடிநகு மேற்றிடம் உள்ளது.

மஞ்சாத பலனி காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு முடிவடைந்தது. (கு)

புதிய விற்பனை நிலையம்

(மன்னார்மன்னை)

மன்னாடைதீவு பனம் பொருள் உற்பத்தியாளர் ஐக்கியநாணயச்சங்கம் இம்மாத இறுதியில் இச்சங்கத்தின் உற்பத்தி, விற்பனை நிலையம் ஒன்றைத் திறக்கவுள்ளது

மன்னாடைதீவு தெசவு நிலையமாக பாவிக்கப்பட்டு வந்த கட்டிடத்தில் இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

கூட்டுறவு ஆயிருந்தி உதவி ஆணையாளரின் கியாரிகிக் போக்கு மாவட்ட நிட்டமிடல் பணிப்பாளரும், யாழ். மாவட்ட நெசவாளர் சங்கங்களின் சமாசத் தலைவருமான திரு எக். கிஷநாதன் இக்கட்டிடத்தை இச்சங்கத்தின்பாவனைக்கு வழங்கியுள்ளார்.

மோட்டார் சைக்கிள்! கடத்தப்பட்டது

(சாவகச்சேரி)

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இரு இளந்தெரியாத இளைஞர்களால் ஓய்வு பெற்ற அதிபரின் மோட்டார் சைக்கிள் செல்லவிடத்தப்பட்டது.

மட்டுவில் கிழக்கோவிலடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் திரு. நீ மகேசன் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தனது மோட்டார் ஓய்வூதியப் பணத்தினைப் பெறும் பொருட்டு யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளைக்குப் போய்க் கொண்டிருந்தார்.

செம்மணி வீதியில் இரு இளந்தெரியாத இளைஞர்கள் அதிபரை மறித்து மோட்டார் சைக்கிளைத் தருமாறு கேட்டு கேட்டிச் சென்றுள்ளனர்

82 ஸ்ரீ 5201 இலக்கம் கொண்ட இம் மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டது தொடர்பாக அதிபர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

வேலைவாய்ப்பு ..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்றமையை கலந்தெழுத்தும் தட்டெழுத்தும் இணைந்த ஒரு பாடமாகவே கணிக்கப்படுகின்றது எனவே கலந்தெழுத்துப் பயிலும் ஒவ்வொருவரும் தட்டெழுத்தும் பயிலவேண்டும். அபோதுதான் அவர்கள் பொதுப் உரிமைகளுக்கத் தோற்ற முடியும். ஒவ்வொருவரும் கலந்தெழுத்து, தட்டெழுத்து பயிற்சியை மேற்கொண்டிருப்பது நன்மையளிக்கக் கூடியது

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. வ. செல்லத்தம்பி உரையாற்றுகையில், "இங்கு எம் வகுதி நலன்புரிச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் இலவச தமிழ் ஆங்கில கலந்தெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் இம்பகுதி இளைஞர் யுவதிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். எம்மக்கள் வகுதி மக்களுக்காகவே சேவை யாற்றுகின்றதென்பதற்கு இம் மக்கள் வகுதியில் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் இலவசப்பயிற்சி வகுப்புகள் உதாரணமாகின்றன. வல்வெட்டித்துறைப் பகுதியில் இவ்வாறான இலவச பயிற்சி நெறிகளை நடாத்தி வரும் மக்கள் வகுதி ஊழியர் நலன் புரிச் சங்கத்தினர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சு)

நெஸ்டமோல்ட்
"நெஸ்கியூறிற்றி பெக்ட்"
பந்திக்குமுந்தி ஆளுக்கு
ரூ 100 பரிசு பெறுவோர்

9-வது வார வெற்றியாளர்கள் (07-05-84-ம் திகதி வரை வந்து குவிந்த விண்ணப்பங்களிலிருந்து.)

W. M. பசுவல, கொக்கெய்டியவ.
C. N. ஹரிச்சந்திரா, அனுராதபுரம்.
C S சிவலிங்கம், சுதுமலை மேற்கு.
R விஜயலட்சுமி, பருத்தித்துறை.
H M விமலசாந்தா, துன்னாலை
D H A. ஜயந்தி, திருகோணமலை.
D விதான பத்திரான, கல்முனை
H A K C. விஜயவிக்கிரம, அநுப்பொல.
D M N பண்டார, பக்கேவெட்டியவ.
திருமதி M. P. ஹேரத், நுவரெலியா.
ஷர்ஸன் மெண்டிஸ், கொரகடுமுல்ல.
P. சந்தனம், மெடிஹிந்த.
M W.V. பத்மினி, பலாலை.
E விஜயராணி, கண்டி.
G. மார்செலின், புங்குடுதீவு.
P. M சாமித்தம்பி, வாரிவைப்பொல.
S. உணரத்ன, கருக்குவ.
M D. மாரபெத்த, கொடுவில.
M. ஷியாமி, மாத்தளை.
J. சக்சாபிக், நித்தவூர்.
M சுரவிக்ரம, கொழுகொட.
M H. மாரவோவு, மஹிடக்ஸ்ப்பு
P A செல்லுண்டோ, கல்கிசை)
R. P பாலகுரிய, கஹாரக்க,
N V ஹுபஹன, பத்தலகந்த

அவ்வப்போது வெற்றிபெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ 100/- க்கான 'நெஸ்கியூறிற்றி'காசோலை இரண்டு வாரத்துள் அனுப்பிவைக்கப்படும்.

நெஸ்டோமோல்ட் - உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
"குழந்தைகள் கண்ட குடியரசு"

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
வெள்ளி—சனிக்கிழமை
சாந்தி
எதிர்கால புதிய பிரதி

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, மாலை 6-15
எம். ஜி. ஆர். - வாணி
நேற்று இன்று நாளை

வெஸ்லி யாழ்ப்பாணம்
தினசரி: 2-30, 5-30
25 - 5 - 84 வரை
வாழ்வே மாயம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
S. S. R., A. V. M ராஜன்
அல்லி
(புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15
ராதிகா ரதி சுதாகர்
நிறம்மாறாத பூக்கள்
(புதிய பிரதி)
(சலன் வசனம்)

றீகல் (யாழ். நகர்)
Now showing
Daily 10-30 2-15
and 4-30
Bud Spencer .....
Terrence Hill .....
Odds and Events
Action - Comedy -

லிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-15
ரவிந்தர் - குமார
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30, 6-00
எஸ். எஸ் ஆர் - விஜயகுமாரி
நானும் ஒருபெண்

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
தவிர்க்கமுடியாத காரணங்களால் திரையிடப்பட முடியாமல் இருந்து இப்பொழுது காண்பிக்கப்படுகிறது.
எம் ஜி ஆர் ஜெயலலிதா
அசோகன் —சௌகார்
மற்றும் பலர் நடித்த
ஜெமினியின்
பிரமாண்டமான படைப்பு
ஒளி விளக்கு
(புதிய வெளியீடு)

மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வடக்கு மழலை இணற்றடி ஸ்ரீவீரகத்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுகிறது.

கும்பாபிஷேக விழாவில் பிரசித்தமான குருக்கள் பலர் கலந்துகொள்கின்றனர்.

திரைப்படத்துறை பற்றிய கருத்தரங்கு

(வேலணை)

காரைநகர் இலக்கிய வட்டத்தினர் 'தமிழ்த்திரைப்படத் துறை' தொடர்பாக தொடர் கருத்தரங்கு ஒன்றை நடாத்தி வருகின்றனர்.

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்காக வேலணை துரைச்சாமி மகாவித்தியாலயத்திலும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் நடாத்தப்பட்டுவரும் இக்கருத்தரங்கின் போது இடையிடையே வீடியோவில் திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன. இறுதியில் வினாடிவினா நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10.30, 2-15, 6-15
வெள்ளி
காவல்தெய்வம்

19—23.5 84
THE SWAP
Await
MAD MONKEY
KUNG FU
(Best of Kung Fu Thiller

"எங்களுக்குள் ஒற்றுமையை வளருங்கள்"

தமிழக பத்திரிகையாளரிடம் தீவிரவாதிகள் வேண்டுகோள்

(சென்னை)

"நாங்கள் தமிழ்த்திரைப்படக் கூட வீரர்கள். எங்களை நீங்கள் தீவிரவாதிகள் என்று குறிப்பிடுகிறீர்கள். ஆனாலும் நாங்கள் சந்தோஷப்படுவோம். ஈழத்தில் இராணுவத்தின் மீது நாங்களும் நடத்தும் உடனே இன்று "விடுதலைப்புலிகள்" என்கிறார்கள்" என்று செய்தியாளர் எழுதுகிறார்கள். ஆனால் அதை அங்கு வேறொரு இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வெளியேயுள்ள நாங்கள் நாங்கள் நாங்களும் ஈழப்போட்டோம் என்று சொல்ல வேண்டியதாகி விடுகின்றது. சம்பந்தப்பட்ட இயக்கத்திற்கு வீண் சங்கடங்கள் ஏற்பட்டுவிடுகின்றன."

இவ்வாறு, தமிழகப்பத்திரிகையாளர்களுக்கு தமிழ் தீவிரவாத இயக்கங்கள் மூன்று ஒருங்கிணைந்த பிள்ளை கலந்த கிறப்புப்பேட்டியில் இதனைத் தெரிவித்தனர்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் "தாய்" வார இதழில் இப்பேட்டி வெளியாகியுள்ளது. இச்சஞ்சிகை "இவை விமர்சனமாக எழுதப்படுகிற விதமல்ல; இரத்தத்தால் எழுதப்படுகிற இதிகாசம்" என்று தலைப்பிட்டுள்ளது.

"தமிழீழவிடுதலை இயக்கம், ஈழபுரட்சிகரஅமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி; தமிழீழவிடுதலைப் புலிகள்; தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய ஐந்து விடுதலைக்கழகங்களும், ஈழவிடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடிவருகின்றன. இதில் முதல் மூன்று அமைப்புக்கள் இப்போது ஒரணியில் வந்துள்ளன. இக்காலகட்டத்தில் ஒற்றுமைபடு செயல்படவேண்டிய அவசியம் ஏற்படுகிறபடியால் ஒருமுகப்படுத்தியுள்ளோம். எங்கள் நாடகத்தில் விடுதலைக்காக ஆயுதமேந்திநிற்கும் இயக்கங்களில் ஒன்றைச்சேர்ந்தவர்கள் நாங்கள் "விடுதலைப்புலிகள்". எங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை தவறு செய்து வெளிவிடுத்தி வெளிவிடாதீர்கள் எங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்துகிற அளவுக்கு உதவுங்கள். நாங்கள் இரத்த வெள்ளத்தில் நீந்தலுக்குள் கொண்டிருக்கிற செய்திகளை தமிழகத்தில் சாதாரண மக்களுக்கு கிடைக்கச்செய்யுங்கள்" என்று மூன்று இயக்கங்களும் விடுத்த செய்தியில் கேட்டுக்கொண்டனர்.

இயக்கங்களின் ஒருமைப்பாட்டைவலுப்படுத்துவாணி, சாதி, இதழ்களும் வெளிக்கிளம்பவரை இவ்வாரம் வெளிவிடுகின்றன. (கெ)

வீமன்காமத்தில் வித்திக்கு இன்று மணிவிழா

(மாவிட்டபுரம்)

யாழ், பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி க. விநாசித்தம்பியின் மணி விழா வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் தமிழ் மன்றம் சார்பில் இன்று நடைபெறுகிறது

வடமராட்சி கல்விப் பணிப்பாளர் திரு எம். கிமிராஸ் பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கவிஞர்கள் பாராட்டுரைகள் என்பவற்றுடன் "கலைமிழக்" எனும் நூலும் வெளியீடும் இடம்பெறும்.

இறுதியில் பேராசிரியர் வித்தியானந்தன் பதிலுரை நிகழ்த்துவார்.

நல்வழிகாட்டி ஓய்வுபெறும் ஆசிரியர்



சேப்பாயில் சைவதமிழையும் தமிழையும் வளர்த்து உயர்த்த விளங்குவது சரவணபவானந்த வித்தியாலயமாகும். ஆசிரிய கிரேஷ்ட உதவியாசிரியராகக் கடமையாற்றிய சீனிவாசகம் சற்குணராஜா கப்பிரமணியம் இம்மாதம் 9ம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

திருநெல்வேலி சைவாசிரிய வாரசபையில் ஆசிரியப்பயிற்சி பெற்ற இவர் தன்னிகரற்ற சைவப்பாடசாலை வடக்கு கோவிலடி திருநாவுக்கரசு வித்தியாசாலை ஊரெழுவேசவித்தியாசாலை, கொக்குவில் கோப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வலிகாமம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய வித்தியாலயங்களில் அரிய சேவை புரிந்து பல மாணவர்களுக்கு நல்வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார்.

இவர் சேப்பாய் வடக்கு கற்கைநா - செல்வமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வர் தமது ஆசிரிய சேவையிற் பெரும் பகுதியைத் தாம் கல்வி பயின்ற சரவணபவானந்தாவுக்கே அர்ப்பணித்துள்ளார்

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவராக இருந்து நிதி சேர்த்துத் தேவையான நிதியுதவி செய்தவர். அவர் காலத்தில் வித்தியாலயம் அடைந்த வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

சேப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில் புனராலயப்புக்கு ஆதரவு திருப்பணி சபைத்தலைவராக அமைந்து ஆற்றும் சேவை அளப்பரியதாகும்.

சைவப்பணிக்கும் சமூகப் பணிக்கும் தன்னை அர்ப்பணித்த மக்கள் மனதில் இடம் பெற்றுள்ள சீ. க. சுப்பிரமணியம் ஆசிரியரின் சேவைக்கும் வாழ்வுக்கும் சித்திர வேலாயுதர் திருவிழா வாழிப்பாராம்!

அ. பஞ்சாட்சரன்

இன்று

(வண்ணார்பண்ணை)

ஆலோலி தெற்குப் பகுதியில் இயங்கும் குடும்பத் திட்டச் சங்கத்தில் அனுசரணையுடன் நடைபெறும் கெளிக்கைத் தொண்டர்களுக்கான குடும்ப நலத்திட்டப் பயிற்சி கருத்தரங்கொன்று இன்று எதிரிவட மத்திய கல்லூரியில் நடைபெறும் இந்தப் பயிற்சிக் கருத்தரங்கை திருமதி ஆனந்த நேசராசா ஆரம்பித்து வைக்கவுள்ளார். உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஜயாத்துரை பேராசிரியர் கணேசலிங்கம், திட்டமிடல் அலுவலர் திரு. ஏ எஸ். பூலேந்திரன் ஆகியோர் இதில் கலந்து உரை நிகழ்த்துவர்.

யாருடையது?

சுதுமலைதெற்கு திரு. எஸ். ராஜலன் என்பவர் ஒருவரைக் கொலைசெய்ததையும், சோதனைக் கண்டுபிடிப்பு சேர்ந்த திரு. க. விஜயமூர்த்தி என்பவர் ஒரு மூக்குக் கண்ணாடியை சிறிது கிடலறக் காசுடனும், திரு. முத்து என்பவர் ஒரு இருக்குப்பை நிறப்பணியையும், திரு. சே. இராசரத்தினம் என்பவர் திருவாளர்கள் கந்தையா தவிசேலாயுதம், கந்தையா சண்முகமூர்த்தி ஆகியோரின் அடையாள அட்டைகளையும், ஒரு அல்பர் திரு. முருகு முகிலன் சாமி அடையாள அட்டையையும், திரு சே. கணேசன் என்பவர் திரு. மயில்வாகனம் நிமலராஜனின் அடையாள அட்டையையும், திரு. ஜி. கருணாகரன் திரு. எம். இராசன் தற்காலிக அடையாள அட்டையையும், திரு. எவ். பெனடிக் என்பவர் திருமதி வெரத்தினம் மகாதேவி, திரு. கைலாசபிள்ளை சிவரத்தினம் ஆகியோரின் அடையாள அட்டைகளையும், செல்வி நடராசா சிவனேஸ்வரி என்பவர் திரு. க. ஏரம்பமூர்த்தியின் அடையாள அட்டையையும், இ. சோ. க. ராதாரத்த பதுமசீட்டையும் கண்டு எடுத்து சமாதான நீதவானிடம் ஒப்படைத்துள்ளார்கள். கரவாகக் கேட்டு ஊரிலுள்ள சிறுவர்கள் சோதனையில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீண்டும் புதிய பிரிவுகள்

★ TELEX OPERATERS
★ ELECTRICAL WIRING
★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP
★ DIPLOMA IN QUANTITY SURVEYING
★ RADIO T. V. and ELECTRONICS
★ E. C. E. (C. E. I.) PART - I and II

செம்முறை, நூற்றிலைகள், நிரந்தர விரிவுரையாளர்கள் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரே ஸ்தாபனம்

ஆரம்பம்: 19-5-84 காலை 9-00 மணி

விபரங்களுக்கு:
FINANCIAL ASSOCIATION
402 1/2, K. K. S ROAD, JAFFNA.
(வெலிங்டன் சினிமா) (8878)

ஹோம் பிறைஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்
யாழ். புடவை வியாபாரிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
எம்மிடம் பணம் நிலையாக வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
30% வருட வட்டி
வழங்குவதுடன் புடவை வகைகளும் கடன் வசதியுடன் வியாபாரத்திற்கு வழங்கப்படும்
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
ஹோம் பிறைஸ் லிமிட்டெட்
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24810

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோவியத் 'மிக்' விமானங்கள் பாவிக்கமுடியாதவையாம்"

விமானப்படைத் தளபதி கருத்து

(கொழும்பு)

சோவியத் யூனியனால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆறு 'மிக் ஜெட்' போர் விமானங்களும் பாவனைக்குதவாதவை என்று இலங்கை விமானப் படை ஒதுக்கிவைத்துள்ளது.

1971ம் ஆண்டு இந்த 'மிக்17' ரகமான விமானங்கள் இலங்கைக்கு அன்பளிப்பாக சோவியத் யூனியனால் வழங்கப்பட்டன, ஆனால் இவை இலங்கை விமானப்படையின் சேவைக்கு ஏற்றவையல்லவென்று விமானப் படைத்தளபதி ஏயர்வைஸ் மார்ஷல் ஆக் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்விமானங்களுக்கு அறுநூறு கண்ணி எரிபொருள் நிரப்பியதான ஒன்றுக்குத் தேவைப்படுகிறது. ஆனால் இக்கு இத்தகைய எரிபொருள் வசதிக்கு ஏற்புடையதல்ல என்று கட்டுக்கூறப்படுகிறது.

இவ்விமானங்களின் இயந்திரம் பராமரிப்புக்குக் கடுந்தன் செலவு ஏற்படுகிறதாம். 'மிக்விமானங்களை 'சேர்விஸ்' செய்வது செலவு கூடியதும் விசேட கவனமெடுக்கவேண்டியதுமாகும். இவைதவிர ரஷ்யாவில் மட்டுமே இந்த வகை பராமரிப்புகள் ஏற்புடையவை, இலங்கையில் ஆயிரம் மணித்தியாலங்களுக்கே இவ்விமானங்கள் பறந்து விட்டன. தற்போது இயற்றுக்கு 'சேர்விஸ்' தேவைப்படுகிறது என்றும் விமானப் படைத்தளபதி கூறினார்.

'ரஷ்யாவில் இவ்விமானங்களை சேர்விஸ் செய்ய முன்வந்தனர் ஆனால் அதுபலனற்றது என்று கூறப்பட்டது.

தற்போது இவ்விமானங்களை யிற்றி வேண்டுமென்று கட்டுநாயக்கா விமானத்தில் ஒன்பதுக்கதில் விடப்பட்டுள்ளன.

கொள்ளை நயர் கைது! ஏராளமான நகைகள் மீட்பு!!

(யாழ்ப்பாணம்)

பலவெளிகளில் சம்பவங்களில் சடுவிட பிரபல 'கேடி' ஒருவரை யாழ் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இக் 'கேடி' பிடமிருந்து லட்சக் கணக்கான நகைகள் உட்பட பலபொருள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை போன்ற இடங்களில் இக்'கேடி' நடத்திய கொள்ளைச்சம்பவங்களிலிருந்தே இப் பொருள்கள் மீட்கப்பட்டதாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இடமாற்றம்பெற்றிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரிலேயே இக் 'கேடி' பிடிபட்டதாகத் தெரிவருகிறது. பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (மா)

கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணி அலுவலகத்தில் துப்பாக்கி முனையில் ஆறு இளைஞர்கள் நடத்த விருந்த கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது!

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுமுன் தினமிரவு 6 பேர் கொண்ட கோஷ்டியொன்று துப்பாக்கி சகிதம் கணி அலுவலகத்தில் நுழைந்து அங்கு காவலாளி சிதம்பரம் நிக்கிலநாதன் என்பவரை கோடரியால் கடுகாயப்படுத்துவிட்டு அலுவலகத்தில் நிலவரவை மானி அறையிலுள்ள கணணி கடைத்தட்டொன்றை அதிலிருந்து நிலவரவை வரைபடங்களை கொள்ளையடிக்க முயன்றனராம்.

இச்சம்பவத்தை அருகிலுள்ள கமநலசேவை அலுவலகத்தில் கடமையாளியான இராமசாமி என்பவர் அறிந்துகொண்டவுடன் ஓடிச்சென்று அருகிலுள்ள கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தார் என்றும் பொலிசார்கொண்டுவரப்பட்ட இடத்துக்கு வந்ததும் இளைஞர்கள் ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஜெயராஜன் நேற்று சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டார். (சு)

எங்களைக் கடத்தியவர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டனர். ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது எனக்குத் தெரியாது. "ஏன் இந்த நேரத்திலே வந்தீர்கள்? நாங்கள் வரலாமுங்கள்" என்று சொன்னேன்.

"போனவர்கள் ஐந்து நிமிடத்திலே வந்தார்கள். துப்பாக்கிகளுடன் நின்ற இளைஞர்கள் கண்ணைக்கட்டினார்கள். எங்கள் வாய்க்கு பிளாஸ்ரரினால் ஒட்டினார்கள் வாகனத்தில் கொண்டுசென்றார்கள்" என்று விபரித்தார்.

"அறையொன்றில் வைத்திருப்பட்ட எமக்கு பகிரங்கமாகத் தெரிந்துகொண்டுவந்தார்கள்" என்றனர் அவர் தம்பதியர்.

மூன்று நாட்களில் எம்மை விடுவித்துவிடுவதாகவும் கோரிக்கைகள் பற்றி எமக்கு ஒன்றுமே தெரிவிக்கப்படவில்லை என்றும், தாம் ச. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.

"நீங்கள் வி. ஐ. ஏ. உளவாளிகளா?" என்று கேட்டதற்கு திரு. ஆனந் சொன்ன பதில்: "அமெரிக்க அரசாங்கத்துடன்கூட எங்களுக்கு எவ்வித தொடர்பும் கிடையாது. நாங்கள் தனிவர்த்தறை ஊழியர்கள். அவ்வளவுதான்!" என்று பதிலளித்தனர்.

கடத்தப்பட்டபோது திரு. ஆனந் தவறாய் அணிந்திருந்தார்.

திருமதி மேரி ஆனந் இரவு அணியும் 'நைற்றி' உடை அணிந்திருந்தார்.

ஆனாலும் தமக்குத் தேவையான உடைகளை அங்கு தந்ததாகவும், தாம் விடுவிக்கப்பட்டபோது அவர்கள் தந்த காதிசட்டைகளையும், ஷோட்டுகளையுமே அணிந்திருந்ததாகவும் சொன்னார்கள். பத்தாவது நாளுக்குப் பதிலாக முதலிலேயே கூட அவர்கள் தந்திருந்தார்கள் என்றும் சொன்னார்கள்.

திருமதி ஆனந் சிறிது கவலை எழுந்திருந்தபோதிலுமிருந்து கண்ணாடி கொண்டுவரலாமா? என்று கேட்ட அவர்களின் பெருந்தன்மையை வெகுவாக புகழ்ந்தனர்.

காலைக் கடனைக் கழிக்கச் செல்லும்போது தம்முடன் ஒரு பெண் கண்காணிப்பாளர் கட்டிவிட்டு அழைத்துச் செல்வாரென்றும் ஒரு பெண்கள் தமது தேவைகளைக் கவனிக்க அமர்த்தப்பட்டார்கள் என்றும் ஒருவர்கள் தம்பதியர் வைத்திருப்பதாகவும் கூறினார் திருமதி ஆனந்.

"எங்களை விடுவிப்பதற்கு முதல், ஒளித்த வெளிக்கிடச் சொன்னார்கள் "என்று கூறிய தம்பதியரிடம் 'ஏன் பிஷப்பிடம் ஒப்படைத்தனர்?" என்று கேட்டதற்கு, 'நாம் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் என்பதனை மேலாளிகளுக்குக் அவர்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள் இதனால், அவர்கள் அங்கு ஒப்படைத்திருக்கலாம் என்று நினைக்கிறோம்" என்றனர்.

"கடத்தல்காரர்களுக்கு குடிதண்ணீர் எழுந்து கேட்டு கொண்டு என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டதற்கு, திருமதி மேரி ஆனந் சொன்னார்.

"அப்படி அவர்களுக்குத் தண்ணீர் எழுந்து கேட்டு கொண்டு என்று நான் கருதவில்லை. அவர்கள் மிகவும் இரக்கத்தோடும் பெருந்தன்மையோடும் நடந்து கொண்டார்கள்"

திரு. ஆனந் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கையில், "உலகத்திலேயே ஆக்கிடத்தில் மிகவும் மோசமான குற்றமாகும் இதனை அனுமதிக்க முடியாது!" என்றார்.

இன்னொரு கேள்விக்கு அமெரிக்கத் தம்பதியர் பதிலளிக்கையில், "எம்மைக்கடத்திய போது மதிலொரு இளைஞர்கள் வந்தார்கள் அவர்கள் மட்டுமே எம்முடன் கடைசிவரை இருந்தார்கள் அவர்கள் குழுக்கு முறையாக நடந்து கொண்டதைக் கவனித்தோம் நாங்கள் இருக்கும் அறைக்குள் சிலசமயம் ஒரேநேரத்தில் நான்கு பேர் வருவார்கள். ஒருவர் 'டேப் றெக்கோடர்' வைத்திருப்பார். மூன்று பேரும் கேள்விகளை ஒவ்வொருவராகக் கேட்பார்கள் பேச்சின் நடுவே குறுக்கிட மாட்டார்கள். மிகப்பண்பாகவே நடந்து கொள்வார்கள்' என்றனர்.

"ஒருவரை ஒருவர் தோழர் தோழர் என்று அழைத்துக் கொள்வார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருவருடைய பெயரைச் சொல்லி அழைத்ததை நாம் கேட்கவில்லை" என்றும் சொன்னார்கள்.

'யாழ்ப்பாணத்து மக்கள் எப்படிப்பட்டவர்கள்?" என்று ஒரு கேள்விக்கு திரு. ஆனந் இப்படிப் பதில் சொன்னார்கள்.

"டாக்டர்கள், சமையற்காரர்கள், நீதிபதிகள் என்று பல்வேறு தரப்பட்ட மனிதர்களைக் நன்கு தெரியும் அவர்களுடன் எல்லாம் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்கள் ஒருபோதும் எனக்குக் சிறு தீங்கு இழைக்கவில்லை மிகவும் நல்லவர்கள் வாழ்ப்பாணத்தவர்கள் கிறிஸ்தவ பூர்வமாக நடந்து என்னை மனதை வெகுவாகக் கவர்ந்தவர்கள்.

"தாங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்னை உலகுக் காட்ட விரும்புவதாகவும் என்னிடம் சொன்னார்கள்" என்றும் திருமதி ஆனந் சொன்னார்

திருமதி ஆனந் கடத்திய இளைஞர்கள் பற்றிய தனது கருத்தைப்பின்வருமாறு குறிப்பிட்டார்.

"எல்லைக்கட்டுத்தியவர்கள் மனிதாபிமானமுள்ள இளைஞர்கள் பயங்கரவாதிகளாக இருந்திருந்தால் எம்மைக் கொன்று செய்திருப்பார்கள்"

துப்பாக்கிச்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேந்திரன் (வயது 26) என்ற இளைஞர் நேற்று உடுப்பிட்டிச் சந்தியிலுள்ள ஆமெரிக்கமிஷன் பாடசாலைக்கு முன்னால் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்.

இவர் சாரம் அணிந்திருந்தார் இவரின் கண்கள்கட்டி வேஷ்டியினால் கட்டப்பட்டிருந்தது. நேற்று நண்பகல் 12-30 மணிளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இவர் திருமணமானவர்.

இவருடைய தாய் தம்பிராஜா செல்லம்மாவும், சகோதரி தம்பிராஜா செல்வராணியும் சடலத்தை அடையாளம் காட்டினர்.

யாழ்ப்பாணத்துறை நீதவான் திரு ஏ. கணபதிப்பிள்ளை விசாரணை நடத்தி சடலத்தை பார்வையிட்டு, பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இவருடைய தலையில் நான்கு சுட்டுக்காயங்கள் காணப்பட்டன, யாழ். சட்டவைத்திய அதிகாரி பிரேதபரிசோதனை நடத்தினார். சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (வெ)

மட்டக்களப்பில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கோரிக்கை விடுத்திருக்கிறது இதற்கிணங்க மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இன்றும் நாளையும் இதுதொடர விருக்கிறது.

ஹர்த்தாவின் முதல் தினமான நேற்று மட்டக்களப்பில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன, சந்தையில் ஒரு சில விவசாயிகளைத் தவிர பொதுமக்கள் எவரையும் காணமுடியவில்லை.

தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. இ. போ. ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டபோதும் அவைகள் இரவு 7 மணியுடன் தமது சேவையை நிறுத்திக்கொண்டன.

பாடசாலைகளை பாணவர் முழுமையாக பகிஷ்கரித்திருந்தனர் பொதுவாக நகரம் வெறிச்சோடிக் கிடந்தது

இந்த ஹர்த்தாவையொட்டி வாழ்-மட்டக்களப்புப்பகுதிகளை விடுத்த அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளது. (சு

யாழ் பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக் கிசிப்பவர்) ஆகிய இருவருமே இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களாவர்.

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள சாவிடுதிகளை மற்றும் மாணவர் அவை அறைகள் நூற்றிலைப்பகுதி ஆகியன சல்லடை போடுதேடுதல் நடத்தியதாகவும் பூட்டப்பட்டிருந்த சில அறைகள் கூட உடைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களிடம் விழக்கு சோதனை செய்யப்பட்டபோது அங்கிருந்த சில புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சில மாணவர்கள் அங்கு வைத்து விசாரணை செய்யப்பட்டதாகவும் ஒரு மாணவரைக் குறிப்பிட்ட ஒருநிறத்துக்கு ஒரு முக்கு வருமாறு இராணுவ அதிகாரி ஒருவர் அறிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரால் விசாரணைக்கு கொண்டுசெல்லப்பட்ட பல்கலைக்கழக இருவருமே இராணுவத்தினரையும் விடுவிப்பது சம்பந்தமாகப் பல்கலைக்கழக நிர்வாக இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்த பேராசிரியர்களிடமும் விடுதலை செய்யப்படவில்லை. தொடர்ந்து விசாரணைக்குமுடுத்தப்படுகிறார்கள். (மா)

சர்வமதத் தலைவர்கள் மகாநாடு

(கொழும்பு)

இந்த மாடக தேசிய சமூக நற்செயல்களைக் கொண்ட குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று நேற்று நடைபெற்ற சர்வமதத் தலைவர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது

சமூகங்கள், மதங்களிடையே ஐக்கியத்தை நிலைநாட்டுதல் குற்றச்செயல்கள், ஊழல்கள் ஒழித்தல், போதை வஸ்து பாவனையைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியன தொடர்பான தீர்மானங்களும் நேற்றைய மகாநாட்டில் எடுக்கப்பட்டது. (வெ)

இன்று

(கண்ணாடிக்கண்)

மண்டைதீவு மகா வித்தியாலய கலைக்கூடம் மைதானமெய்வல்லுனர் போட்டி இன்று வித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

அதிபர் திரு ச. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டி வைபவத்தில் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாதரசர்மா முதன்மை பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். வலிகாமம் கல்வியதிகாரி திரு. பொன் எணேசன் பரிசுகளை வழங்கி வைப்பார்

சர்வகட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 9-ம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணுமுகமாக புதிய அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஆராயும் நிபுணர் குழுவிலும், கல்வி, வேலைவாய்ப்பு, தொழிலுரிமையைற்கு ஆராயும் நிபுணர் குழுவிலும் அங்கத்துவம் வகிப்பதற்கு பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் அறிவித்திருந்தது தெரிந்ததே

இன்று கூடும் சர்வகட்சி மகாநாட்டில் நிபுணர் குழுக்களில் இடம்பெறவுள்ளவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படுமென்றும், மீண்டும் இந்த சர்வகட்சி மகாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 1ம் திகதி வரை ஒத்திவைக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது. (வெ)

இந்த பத்திரிகை சமநாடு லிமிடெட் வீரகேசரி அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் பிலிப்ஸ்வீதி வேலாயுதம் வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number, B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram: Eelanadu, Telephone: 62382 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org